# THE PROBLEMS OF TEACHING AND LEARNING PROCESSES FOR GRADE 05 STUDENTS' BY DEFICIENT DEVELOPMENT LANGUAGE SKILL BASED ON SCHOOLS OF THE POTTUVIL DIVISION.


BY

MISS.HARSHANA SOMASKANTHAN

REGISTRATION NO: EU/IS/2007/AC/69

INDEX NO : CS 3069



LIBRARY
21 NOV 2016
EASTERN UNIVERSITY, SRI LANKA

EASTERN UNIVERSITY SRI LANKA
PER ARDUA AD SCIENTIAM

423


A DISSERTATION HAS BEEN SUBMITTED TO THE DEPARTMENT OF EDUCATION AND CHILD CARE, EASTERN UNIVERSITY, SRI LANKA. AS PARTIAL FULFILLMENT OF THE REQUIRMENT OF THE SPECIAL DEGREE OF BACHELOR OF EDUCATION.


DEPARTMENT OF EDUCATION AND CHILD CARE
FACULTY OF ARTS AND CULTURE,
EASTERN UNIVERSITY,
SRI LANKA.


2013.


FAC423
Project Report
Library - EUSL

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வுச் சுருக்கம்

"தரம் ஐந்து மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் மொழித்திறன் விருத்தி இன்மையால் ஏற்படும் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் பொத்துவில் கோட்டத்தில் உள்ள ஐந்து பாடசாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவர்களிடையே மொழித்திறன் விருத்தி இன்மைக்குரிய காரணங்கள், அதனால் ஏற்படும் பிரச்சினைகள், இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்து கொள்வதில் எவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன, என்பதோடு மாணவர்களின் மொழித்திறன் குறைபாட்டிற்கு மாணவர்கள் மாத்திரம் தான் காரணமாக அமைகின்றனரா? அல்லது பாடசாலைக் கல்வியின் குறைபாடுகள், பெற்றோரின் கவனயீனங்கள் காரணமாக அமைகின்றதா? இவர்களின் மொழித்திறனை விருத்தி செய்வதில் ஆசிரியர், பெற்றோரின் பங்களிப்புக்கள் எவ்வாறுள்ளது என்பதோடு பேசும் போது, கேட்கும் போது, வாசிக்கும் போது, எழுதும் போது மாணவர்கள் இடர்படுகின்ற விடயங்கள் போன்றவற்றையும் கண்டறிவதாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு பின்வரும் செயற்கிரமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலைகளை இனங்காணல், அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடி பொருத்தமான வகுப்புக்களைத் தெரிவு செய்து அதிலிருந்து குறிப்பிட்ட சில மாணவர்களை எழுமாற்றாகத் தெரிந்தெடுத்து இம்மாணவர்களிடமிருந்து தகவல்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், மதிப்பீடு செய்தல், எதிர்கால ஆய்வுகளுக்கு விதப்புரை செய்தல் என்பன இவ்வாய்வில் அடங்கும். தரவுகளைச் சேகரிப்பதற்கு வினாக் கொத்து, அவதானம், நேர்காணல் போன்ற ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக 5 பாடசாலைகளிலிருந்து 62 மாணவர்களும், 5 ஆசிரியர், அதிபர்களும், 50 பெற்றோர்களும் ஆய்வுக்குட்பட்டனர்.

இவற்றிலிருந்து பெற்றுக் கொண்ட பெறுபேறுகளின் படி இப்பிரதேசத்தில் மொழித்திறனை விருத்தி செய்வதில் சிக்கல்கள் தோன்றுகின்றன. காரணம் ஆசிரியர்களும் ஏனையவர்களும் கூறுகின்ற விடயங்களை செவிமடுத்து விளங்கிக் கொள்வதில் இடர்படுபவர்களாகவும், நாளாந்த தேவைகளை நிறைவேற்ற பேசுவதற்கு சிரமப்படுபவர்களாகவும் காணப்படுகின்றனர். வாசிக்கும் போது சொற்களை மறந்து தவறுவிடுகின்றனர். பிரச்சினை ஒன்றை வாசித்து அதற்கான சரியான தீர்வினை எழுத முடியாதவர்களாகவும், சிறந்த கிரகித்தல் தன்மையற்றவர்களாகவும், ஒலி வேறுபாடுகளை அனுசரித்து வாசிக்க எழுத முடியாதவர்களாகவும், எழுத்துக்களை பிழையாக எழுதுதல், எழுத்துக்களை விட்டு விட்டு வாசித்தல், நிறுத்தற் குறிகளை கருதாமல் வாசித்தல் என்பவற்றோடு உடல், உள ரீதியாகவும் சில மாணவர்கள்

குறைபாட்டிற்குள்ளாகிக் காணப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால் மாணவர்கள் பல்வேறு செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாமல் இடர்படுகின்றனர்.

ஆசிரியர்களது கற்பித்தல் பணிகளுக்குப் போதுமான கற்பித்தல் வசதிகள் பாடசாலையில் காணப்படாமை, மாணவர்களின் பேச்சு வழக்குச் சொற்கள் கற்பித்தலுக்கு தடையாக இருக்கின்றமையுடன் ஆளணி, பௌதீக வசதிகளும் இக்கோட்டப் பாடசாலைகளில் குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் ஆசிரியர்களது கற்பித்தலினால் பிள்ளைகள் கற்றல் செயற்பாட்டின் போது அடிக்கடி ஆசிரியர்களின் உதவியை நாடுகின்றமையினையும் அறியக் கூடியதாக இருக்கின்றது. பெற்றோர்களின் அக்கறையின்மையால் வீட்டில் பிள்ளைகளுக்கு கற்றலுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. சில பெற்றோர்களிடையே காணப்படும் குடிப்பழக்கம் பிள்ளைகளின் கற்றலைப் பாதிக்கின்றமையினால் அனேக பிள்ளைகள் கற்றலில் பின்தங்கியுள்ளதோடு சில பிள்ளைகள் கல்வியினை இடைநிறுத்தியும் உள்ளனர். இவ்வாறான பல முடிவுகள் இவ்வாய்வின் மூலம் பெறப்பட்டது. இம்முடிவுகள் மூலம் மாணவர்களின் மொழித்திறனை விருத்தி செய்வதில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றது என்பதனை அறியக் கூடியதாக இருக்கின்றது.

இந்த வகையான ஆய்வு பொத்துவில் கோட்டத்தில் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்படவில்லை. மாணவர்களின் கற்றல் வினைத்திறனுடையதாக அமைய வேண்டுமாயின் முதலில் அவன் விருத்தி செய்ய வேண்டிய விருத்திப்படி மொழித்திறனாகும். அதற்காக ஆரம்பக் கல்வியிலிருந்து முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதால் மாணவர்களுக்குப் பரிகாரக் கற்பித்தலை அடிக்கடி நடாத்துதல், எழுத்துக்களைத் திருத்தமாக எழுதவும், வாசிக்கவும் கற்பித்தல். ஏற்கனவே விடப்பட்ட தவறுகளைத் திருத்தி ஆசிரியர்கள் மாணவர்களைச் சிறப்பாகப் பயிற்றுவிப்பதோடு பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களையும் பிள்ளைகளின் கற்றலில் அக்கறை செலுத்த வைக்க வேண்டும். இனிவரும் காலங்களில் ஆரம்பக் கல்வியில் விருத்தி செய்ய வேண்டிய முதற்பணி மொழித்திறன் விருத்தி அமைய வேண்டும் என்பதற்கான ஊக்கமும் இவ்வாய்வின் மூலம் கிடைக்கும் என்பதே ஆய்வாளனின் அவாவாகும்.

## பொருளடக்கம்

**அலகுகள்** **பக்.இல**

உறுதி மொழி....i

மேற்பார்வையாளர் சான்றிதழ்....ii

நன்றியுரை....iii

முன்னுரை....iv

ஆய்வுச் சுருக்கம்....v

அட்டவணை விபரம்....xi

உருக்கள்....xi

**1.0 அத்தியாயம் ஒன்று ஆய்வு அறிமுகம்**....(1-14)

1.1 அறிமுகம்....1

1.2 ஆய்வுப் பின்னணி....3

1.3 ஆய்வுக்கான நியாயம்....5

1.4 ஆய்வுப் பிரச்சினை....8

1.5 ஆய்வு நோக்கம்....9

1.6 ஆய்வு வினா....10

1.7 ஆய்வுப் பிரதேசம்....10

1.7.1 அம்பாரை மாவட்டம்....10

1.7.2 பொத்துவில் பிரதேசம்....11

1.7.3 சனத்தொகை....11

1.7.4 கல்வி....12

1.7.5 பொருளாதார நிலை....13

1.8 ஆய்வு மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்....14

**2.0 அத்தியாயம் இரண்டு இலக்கிய மீளாய்வு**....(15-49)

2.1 அறிமுகம்....15

2.2 ஆரம்பக் கல்வி....15

2.3 மொழி பற்றிய விளக்கங்கள்......18

2.4 மொழித்திறன் விருத்திகள்......19

2.4.1 மொழி விருத்தியின் நோக்கங்கள்......20

2.4.2 தரம் 5ல் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் மொழித்திறன் தேர்ச்சிகள் 20

2.5 மொழித்திறனின் வகைகள்......21

2.5.1 செவிமடுத்தல்......21

2.5.1.1 செவிமடுத்தலின் வகைகள்......22

2.5.1.2 செவிமடுத்தலின் நோக்கம்......22

2.5.1.3 செவிமடுத்தலுக்கான சந்தர்ப்பங்கள்......23

2.5.1.4 செவிமடுத்தற் பண்புகள்......23

2.5.2 பேசுதல்......25

2.5.2.1 பேச்சுத் திறன் ஏன் அவசியம்......26

2.5.2.2 பேசுதற் பண்புகளும் பாங்குகளும்......26

2.5.3 வாசித்தல்......28

2.5.3.1 வாசித்தல் வகைகள்......29

2.5.3.1.1 உரத்து வாசித்தல்......29

2.5.3.1.2 மௌன வாசிப்பு......31

2.5.3.2 வாசிக்க இடர்படும் மாணவருக்குக் கற்பிக்கும் போது கவனம்செலுத்த வேண்டிய விடயங்கள்......31

2.5.4 எழுதுதல்......32

2.5.4.1 ஒர் ஆசிரியர் எழுத்துப் பயிற்சியினை அளிக்கும் போது கவனிக்க வேண்டியவை......35

2.5.4.2 எழுத்துக்களை கற்றுக் கொடுக்கும் 4 முறைகள்......36

2.6 ஆசிரியர்களின் பங்களிப்புக்கள்......38

2.6.1 மாணவர்களின் மொழித்திறனை விருத்தி செய்வதில் ஆசிரியர் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்......40

2.7 பெற்றோரின் பங்களிப்புக்கள்......42

2.7.1 ஆரம்பப் பிள்ளைப் பருவச் சிறார்களின் மொழி விருத்திச் செயற்பாடுகளில் பெற்றோரின் பங்களிப்புக்கள்......42

2.8 அதிபரின் பங்களிப்புக்கள் ....................................................................................45

2.9 மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் தாக்கம் செலுத்துகின்ற காரணிகள் ........................................................................................................................45

**3.0 அத்தியாயம் மூன்று ஆய்வு முறைமையியல்**.................................................(50-59)

3.1 அறிமுகம் ....................................................................................................50

3.2 ஆய்வுப் பிரதேசம் ..........................................................................................51

3.3 ஆய்வுப் பிரச்சினை .........................................................................................52

3.4 ஆய்வு வடிவமைப்பு........................................................................................53

3.5 ஆய்வு முறை ................................................................................................54

3.6 மாதிரி எடுப்பு ...............................................................................................55

3.7 தரவு சேகரித்தல் ............................................................................................57

3.7.1 வினாக்கொத்து ..........................................................................................57

3.7.2 அவதானம் ................................................................................................57

3.7.3 நேர்காணல்...............................................................................................58

3.8 தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் முறை ..............................................................59

**4.0 அத்தியாயம் நான்கு தரவுகளின் பகுப்பாய்வும் வியாக்கியானமும்**.............................................................................(60-95)

4.1 அறிமுகம் ....................................................................................................60

4.2 மாணவர்களுக்கான வினாக் கொத்தின் பகுப்பாய்வு ...................................................60

4.3 ஆசிரியருக்கான வினாக் கொத்தின் பகுப்பாய்வு.........................................................77

4.4 ஆசிரியருக்கான நேர்காணல் வினாக்களின் பகுப்பாய்வு ..............................................87

4.5 அதிபருக்கான நேர்காணல் வினாக்களின் பகுப்பாய்வு.................................................90

4.6 பெற்றோருக்கான நேர்காணல் வினாக்களின் பகுப்பாய்வு..............................................92

**5.0 அத்தியாயம் ஐந்து பிரச்சினைக்கான தீர்வுகளும் ஆலோசனைகளும்**.......................................... (95-110)

5.1 அறிமுகம் ....................................................................................................95

5.2 இனங்காணப்பட்ட பிரச்சினைகளும் தீர்வாலோசனைகள் ..............................................95